**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கல்வி – ஆதி திராவிடர் நல / அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் / விடுதிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் / காப்பாளர்களுக்கு 2016–2017 ஆம் கல்வி ஆண்டில் கலந்தாய்வு முறையிலான பொது மாறுதல்கள் வழங்குதல் – கடைப்பிடிக்கப்பட வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 7) துறை

அரசாணை (ப) எண். 142

நாள்: 20 .07.2016
துன்முகி, ஆடித் திங்கள் 5 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (ப) எண். 128, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 26.05.2015.
2. ஆதி திராவிடர் நல இயக்குநரின் கடிதம் ந.க.எண். எ1/10300/2016, நாள் 17.06.2016.

******

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2015–2016 ஆம் கல்வியாண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கும் பள்ளிகள் / விடுதிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் / காப்பாளர்களுக்கு கலந்தாய்வு முறையிலான பொது மாறுதலின்போது பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதே போன்று, 2016–2017 ஆம் கல்வியாண்டில், இத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகள் / விடுதிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் / காப்பாளர்களுக்கு கலந்தாய்வு முறையில் பொது மாறுதல்கள் வழங்கப்படும்போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பாக ஆணை வெளியிடக் கோரி மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் ஆதி திராவிடர் நல இயக்குநர் அரசுக்கு கருத்துருவினை அனுப்பியுள்ளார்.

2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பள்ளிகள் / விடுதிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் / காப்பாளர்களுக்கு Online மற்றும் நேரடி கலந்தாய்வு மூலம் பொது மாறுதல் வழங்க அனுமதி அளித்தும், Online கலந்தாய்வு பணிக்கு தேவைப்படும் செலவினத் தொகை ரூ.75,000/– ஆதி திராவிடர் நல இயக்குநர் அலுவலகத்தின் சில்லரைச் செலவினத்தின் கீழ் கூடுதல் நிதியொதுக்கீடாக ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடும்படி ஆதி திராவிடர் நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார். மேலும், Online மூலம் கலந்தாய்வு நடத்தும்போது உரிய காலிப் பணியிடங்களுக்கு பணி மூப்பின் அடிப்படையில் ஆசிரியர்களின் விருப்பத்திற்கேற்ப ஆணை வழங்கும் முறை பின்பற்றப்பட்டு வருகிறதென்றும், இடைநிலை / பட்டதாரி ஆசிரியர் நிலையில் கலந்தாய்வினை Online மூலம் மேற்கொள்ளும்போது கீழ்க்கண்ட நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படுவதற்கான சூழல் உள்ளது என்றும் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஆதி திராவிடர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்:–

1) மூன்று ஆண்டுகள் பணி முடித்த காப்பாளர்களை ஆசிரியர்களாகப் பணியமர்த்த அரசாணை (ப) எண். 96, ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் நலத் துறை, நாள் 20.05.2013–இல் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், மூன்று ஆண்டுகள் பணி முடித்த

ஆசிரியர்களை விடுதிக் காப்பாளர்களாகப் பணியமர்த்த வேண்டுமென்று எந்த அரசாணையிலும் குறிப்பிடப்படவில்லை.

2) விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர்கள் பெரும்பாலும் தமிழ் மற்றும் சமூக அறிவியல் பட்டதாரிகள் ஆவர். இவர்களை ஆசிரியர்களாகப் பணியமர்த்தும்போது மேற்கண்ட பாடங்களில் உபரி ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படும்.

3) சில மாவட்டங்களில் விடுதிகளின் எண்ணிக்கை குறைவாகவும், பள்ளிகளின் எண்ணிக்கை அதிகமாகவும் உள்ளது. சில மாவட்டங்களில் விடுதிகளின் எண்ணிக்கை அதிகமாகவும், பள்ளிகளின் எண்ணிக்கை குறைவாகவும் உள்ளது.

எனவே, விகிதாச்சாரப்படி Online கலந்தாய்வு மூலம் மாறுதல்கள் வழங்குவதில் நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படும் சூழல் உள்ளதால், மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர், உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர், நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர், ஆரம்பப்பள்ளி தலைமையாசிரியர், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர், உடற்கல்வி இயக்குநர், உடற்கல்வி ஆசிரியர், கணினி ஆசிரியர், தமிழாசிரியர் மற்றும் இடைநிலை ஆசிரியர்களுக்கு **27.07.2016** மற்றும் **28.07.2016** ஆகிய தேதிகளில் Online மூலம் கலந்தாய்வு நடத்தவும், பட்டதாரி மற்றும் இடைநிலை விடுதிக் காப்பாளர் ஆகியோருக்கு நேரடி கலந்தாய்வு முறையினைப் பின்பற்றி ஆதி திராவிடர் நல இயக்குநர் அவர்களால் பணி மாறுதல்கள் வழங்கவும் அனுமதி வழங்கி ஆணை வெளியிடும்படி ஆதி திராவிடர் நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

**3.** ஆதி திராவிடர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதன் அடிப்படையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கும் பள்ளிகள் / விடுதிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் / காப்பாளர்களுக்கு **2016–2017** ஆம் கல்வியாண்டில் Online மற்றும் நேரடி கலந்தாய்வு முறையில் பொது மாறுதல்கள் அளிக்கும் போது கீழ்க்காணும் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென அரசு ஆணையிடுகிறது:–

i) மூன்று வருடங்களுக்கு மேல் அரசுப் பணியாளர்கள் ஒரே பணியிடத்தில் பணியாற்றக் கூடாது என்பது பொதுவான ஆணை. ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் பணிபுரியும் பணியிடங்கள் நிர்வாகப் பணியிடங்கள் அல்ல என்பதால் இந்த ஆணை கடைபிடிக்கப்படுவதில்லை. இதே முறை தொடரலாம்.

ii) பணி ஓய்வு, பணித் துறப்பு, பணி நீக்கம், பதவி உயர்வு, மரணம், புதிய பணியிடங்கள் உருவாக்கப்படுதல் மற்றும் நிர்வாகக் காரணங்கள் போன்ற இனங்களால் ஏற்படும் காலிப் பணியிடங்களுக்கு மட்டும் பொது மாறுதல்கள் செய்யப்பட வேண்டும். ஒரு ஆசிரியருக்கு மாறுதல் தருவதற்காக எக்காரணம் கொண்டும் மற்றொரு ஆசிரியரை மாறுதல் செய்யக் கூடாது.

iii) இடைநிலை ஆசிரியர் / பட்டதாரி ஆசிரியர் / தமிழ் ஆசிரியர்/ துவக்கப்பள்ளி / நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் / உயர்நிலை / மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர், உடற்கல்வி இயக்குநர், உடற்கல்வி ஆசிரியர், கணினி பயிற்றுநர் மற்றும் சிறப்பாசிரியர் காலிப் பணியிட விவரங்கள் ஆதி திராவிடர் நல இயக்குநர் அலுவலகம் மற்றும் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத் தகவல் பலகையில் கலந்தாய்வு நடப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்னதாக ஒட்டப்பட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும். மாவட்ட தேசிய தகவல் மைய இணையதளத்திலும் வெளியிட வேண்டும். கலந்தாய்வு குறித்த செய்தியினை அனைத்து செய்தித் தாள்களிலும் வெளியிடலாம்.

iv) காலிப் பணியிடங்களுக்கு மாறுதல் கோரிய ஆசிரியர்கள் தங்களுடைய விவரங்களை இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும் முழுமையான விவரங்கள் இல்லாத விண்ணப்பங்கள் கலந்தாய்வுக்கு பரிசீலிக்கப்படக் கூடாது. மேற்கண்ட விவரங்கள் ஆதி திராவிடர் இயக்குநர், அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகங்களிலும் அலுவலக தகவல் பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

v) மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் கீழ்க்கண்ட முன்னுரிமைப்படி பரிசீலனை செய்யப்பட வேண்டும்:-

(1) மாவட்டத்திற்குள் மாறுதல் கோரும் கோரிக்கைகள்.

(2) பிற மாவட்டங்களிலிருந்து மாவட்ட மாறுதல் வழங்கி ஒதுக்கீடு செய்யப்படுவோரின் கோரிக்கைகள்.

vi) **பணிக்காலம்**

கோடை விடுமுறைக்குப்பின் பள்ளி திறக்கும் நாளன்று ஒரே இடத்தில் குறைந்தபட்சம் ஓராண்டு கட்டாயம் பணி முடித்திருக்க வேண்டும். கீழ்க்காணும் பிரிவினர்களுக்கு ஓராண்டு பணிக் காலத்திலிருந்து விலக்களிக்கலாம் :–

(அ) இராணுவத்தில் பணிபுரிபவர்களின் மனைவி தங்களின் சொந்த பாதுகாப்பு கருதி மாறுதல் கோரும்போது.

(ஆ) முற்றிலும் கண் பார்வையற்றவர்கள் (Total Blindness).

(இ) மூன்று சக்கர வாகனத்தில் பயணம் செய்யும் நிலையில் உள்ள மாற்றுத் திறனாளிகள்.

(ஈ) இருதய மாற்று அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள்.

(உ) கடுமையாக பாதிக்கப்பட்ட புற்று நோயாளிகள்.

(ஊ) பணி நிரவல் மூலமாக பிற பள்ளிகளுக்கு மாறுதல் செய்யப்பட்டவர்கள்.

(எ) விதவைகள்.

VII. **ஒரு காலிப் பணியிடத்திற்கு ஒருவருக்கு மேல் மாறுதல் கோரினால் கீழ்க்கண்ட வழிகாட்டுதலைப் பின்பற்றி முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்:–**

அ) இந்திய இராணுவத்தில் பணிபுரியும் பணியாளர்களின் கணவன் / மனைவியர்.

ஆ) i) முற்றிலும் கண் பார்வையற்றவர். (Total Blindness)

ii) விதவைகள் / 40 வயதைக் கடந்த திருமணம் செய்து கொள்ளாத முதுநிலைக் கன்னியர்.

iii) மூன்று சக்கர வண்டியில் பயணம் செய்யும் அளவிற்கு உள்ள மாற்றுத் திறனாளிகள். இரண்டு கால்களும் பாதிக்கப்பட்டு ஊன்று கோல் உதவியுடன் (Using Clipers) மெதுவாக செல்லக்கூடிய நிலையில் உள்ள மாற்றுத் திறனாளிகள்.

iv) இருதய மாற்று அறுவை சிகிச்சை மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள்.

v) கடுமையாக பாதிக்கப்பட்ட புற்று நோயாளிகள்.

vi) மன வளர்ச்சி குன்றிய மற்றும் உடல் குறைபாடுகளுடைய குழந்தைகளின் பெற்றோர்.

இ) கணவன் / மனைவி இருவரும் பணியில் இருக்கும் நேர்வுகளில் அந்த தம்பதியினர் (கணவன் / மனைவி) 30 கி.மீ. சுற்றளவு தூரத்திற்குள் உள்ள இடத்தில் பணிபுரியும் பட்சத்தில் அவர்கள் Separation எனக் கருதி கணவன் / மனைவி முன்னுரிமை அளிக்கப்பட மாட்டாது. கணவன் / மனைவி என்ற முன்னுரிமை மைய அரசு / மாநில அரசு அலுவலகங்கள், பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசு பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர்களுக்கு மட்டுமே பொருந்தும். அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட உரிய அலுவலர்களால் பணிச்சான்று வழங்கப்பட வேண்டும். இதில் மைய அரசு / மாநில அரசு / பொதுத்துறை நிறுவனம் என்ற பாகுபாடு கிடையாது.

ஈ) புதியதாக பணியில் சேர்ந்த ஆசிரியர்கள் தவிர ஒரே இடத்தில் குறைந்தபட்சம் ஓராண்டு (01.06.2016 அன்று) அதற்கு மேலும் பணியாற்றிய ஆசிரியர்கள்.

## VIII. சிறப்பு நிகழ்வு

கணவன் அல்லது மனைவி திடீரென்று விபத்திலோ அல்லது நோய்வாய்ப்பட்டு இறந்தாலோ அத்தகைய ஆசிரியர்கள் குறித்த நிகழ்வுகளில் கலந்தாய்வு குறித்த விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் சிறப்பு நிகழ்வாகக் கருதி மாறுதல் வழங்கலாம்.

## IX. கலந்தாய்வு (Counselling)

அ) இடைநிலை ஆசிரியர் / சிறப்பாசிரியர் / உடற்கல்வி ஆசிரியர் / பட்டதாரி ஆசிரியர் / தமிழ் ஆசிரியர் / காப்பாளர் / காப்பாளினி / தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் / நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களில் உள்ள ஆசிரியர் / காப்பாளர் / காப்பாளினி பணியிடங்களுக்கு மாவட்ட மாறுதல் மற்றும் உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர், உடற்கல்வி இயக்குநர், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், இதர அனைத்து ஆசிரியர்களுக்குமான மாவட்ட மாறுதல் குறித்து ஆதி திராவிடர் நல இயக்குநர் அவர்களால் ஆணை வழங்கப்படும்.

ஆ) ஆரம்பப்பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ஆகிய பதவிகளுக்கு மாவட்ட அளவில் பணி மூப்பு பராமரிக்கப்படுவதால் இப்பதவியில் பணிபுரிவோர் மாவட்ட

மாறுதல் கோர இயலாது. அவ்வாறு கோரும் பட்சத்தில் ஆரம்பப்பள்ளி தலைமை ஆசிரியர் இடைநிலை ஆசிரியராகவும், நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பட்டதாரி ஆசிரியராகவும் பதவியிறக்கம் பெற எழுத்து மூலமாக சம்மதித்து கடிதம் அளித்த பின்பே அவர்களது கோரிக்கை பரிசீலிக்கப்பட வேண்டும்.

இ) நிர்வாகக் காரணங்களுக்காக மேற்கொள்ளப்படும் மாறுதல்களில், புகார்களில் அடிப்படை முகாந்திரம் இருந்தால் மட்டுமே மாறுதல் செய்யப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட கோப்பில் இது சார்பான விவரம் பதிவு செய்யப்பட வேண்டும். பொது மாறுதல்களுக்குப் பின் நிர்வாகக் காரணங்களுக்காக மாறுதல் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அனைத்து ஆதாரங்களுடன் உரிய முன்மொழிவை ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு அனுப்ப வேண்டும். இயக்குநராலேயே முன்மொழிவு பரிசீலிக்கப்பட்டு, அவசியம் என அறியப்பட்டால் இயக்குநரால் மாறுதல் ஆணை வழங்கப்படும். பொது மாறுதல் கலந்தாய்வுக்குப் பின் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் எவ்வித மாறுதல் ஆணையும் வழங்கக்கூடாது. தவறும் பட்சத்தில், அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஈ) இடைநிலை ஆசிரியர் / பட்டதாரி ஆசிரியர் / முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் நிலையில் புதிதாகப் பணியில் சேர்ந்தவர்கள், பணியில் சேர்ந்து இரண்டாண்டு முடிந்த பின்னர் அவர்கள் மாறுதல் கோரும் பள்ளிகளில் மாவட்டத்தில் காலி இடம் இருப்பின் மாறுதல் செய்யப்படலாம்.

உ) ஏற்கனவே புகாரின்பேரில் நிர்வாகக் காரணங்களுக்காக மாற்றப்பட்டவர்கள் இரண்டு ஆண்டுகள் கழித்து விண்ணப்பிக்கலாம். ஆயினும், ஏற்கனவே பணியாற்றிய இடத்திற்கு மாறுதல் கோரி விண்ணப்பிக்கக் கூடாது. இராமநாதபுரம், தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், கடலூர், திருவள்ளூர், காஞ்சிபுரம், பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் நீலகிரி போன்ற மாவட்டங்களிலும், எளிதில் செல்ல இயலாத மலைப்பாங்கான பகுதிகளிலும் பணியாற்றும் ஆசிரியர்கள் வெளி மாவட்டங்களுக்கு மாறுதல் பெற்றுச் செல்லும்போது அவர்கள் பணியிடத்திற்கு பதிலி ஆசிரியர் வந்து பொறுப்பேற்ற பிறகே அவர்களை பணியிலிருந்து விடுவிப்பு செய்யப்பட வேண்டும்.

ஊ) கோரிக்கையின் அடிப்படையில் மாறுதல் பெற்றவர்கள் குறைந்தபட்சம் ஒரு ஆண்டுக்கு மாறுதல் கோர இயலாது. பதவி உயர்வு பெற்றுச் சென்றவர்கள், சொந்த மாவட்டத்தில் பணிகுறைப்பு காரணமாக வேறு மாவட்டத்திற்கு சென்றவர்கள் ஆகியவர்களுக்கு இந்த குறைந்தபட்ச கால அளவு பொருந்தாது.

எ) மனமொத்த மாறுதல்களைப் பொறுத்தமட்டில், கலந்தாய்வு பொது மாறுதல் நடைபெறுவதற்கு முன்னர் செய்து முடிக்க வேண்டும்.

ஏ) மனமொத்த மாறுதலில் ஏற்கனவே பயனடைந்தவர்களை திரும்பவும் அதே இடத்திற்கு மீண்டும் மனமொத்த மாறுதலில் செல்ல அனுமதிக்க கூடாது. மனமொத்த மாறுதல்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் தற்போது பணிபுரியும் பள்ளியில் ஓராண்டு பணிக்காலத்தை கட்டாயம் முடித்திருக்க வேண்டும்.

ஐ) விடுதி பொறுப்புடன் கூடிய அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளி தலைமையாசிரியராக 3 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றியவர்கள் மீது புகார்கள் ஏதும் வரப் பெற்றால் புகாரின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டு புகார் உண்மையென கண்டறியப்பட்டால் அவர்களை விடுதி பொறுப்பு இல்லாத வேறு பள்ளிகளுக்கு பணியிட மாறுதல் செய்யலாம்.

ஒ) மாணவியர் விடுதிகளுக்கு காப்பாளினிகள் மட்டுமே நியமிக்கப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் காப்பாளர்களை நியமிக்கக் கூடாது. காப்பாளர்களுக்கு மாணவியர் விடுதிகளில் கூடுதல் பொறுப்பும் வழங்கக் கூடாது.

ஓ) சில மாவட்டங்களில் விடுதிகளின் எண்ணிக்கை குறைவாகவும், பள்ளிகளின் எண்ணிக்கை அதிகமாகவும் உள்ளது. சில மாவட்டங்களில் விடுதிகளின் எண்ணிக்கை அதிகமாகவும் பள்ளிகளின் எண்ணிக்கை குறைவாகவும் உள்ளது. எனவே 3 ஆண்டுகள் தொடர்ந்து விடுதிகளில் பணிபுரிந்த காப்பாளர்/காப்பாளினிகளை பள்ளிகளில் ஆசிரியராக பணியிட மாறுதல் செய்யப்படுகின்ற நேர்வில் நிர்வாக ரீதியாக ஆதி திராவிடர் நல இயக்குநர் அவர்களால் பரிசீலிக்கப்பட்டு பணியிட மாறுதல் வழங்கலாம். காப்பாளர்கள் / காப்பாளினிகளின் மூன்றாண்டுகள் பணிக் காலத்தை அவர்கள் காப்பாளர்/ காப்பாளினியாக பணியில் சேர்ந்த நாளினை கணக்கில் எடுத்து கொள்ளாமல் மூன்று கல்வியாண்டுகள் முடிந்ததை அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

ஔ) பொறுப்பு காப்பாளர்/காப்பாளினி நியமனங்கள் மற்றும் மாற்றுப்பணி நியமனங்கள் நேர்வில் தொடர்புடைய மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் உரிய முன்மொழிவுகளை ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு அனுப்பி இயக்குநர் அவர்களால் ஆணை வழங்கப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ஆணை வழங்குதல் கூடாது.

அஅ) மாறுதல் கோரியுள்ள ஆசிரியர்களின் பெயர்களை பத்தி 3 (v)–இல் கண்ட முன்னுரிமையின்படி பட்டியல் தயாரித்து அதன்படி ஒரு குறிப்பிட்ட நாளில் கலந்துரையாடலுக்கு (Counselling) வரவழைத்து அவர்களிடம் தகுதியுள்ள காலிப் பணியிடங்களின் பட்டியலைக் கொடுத்து அவர்கள் விரும்பிய இடத்திற்கு மாறுதல் அளிக்கப்பட வேண்டும். இவ்வாறு வழங்கும்

போது மாறுதலால் ஏற்படும் காலிப் பணியிடத்தையும் அவ்வப்போது பட்டியலில் சேர்த்து அடுத்து முன்னுரிமைப்படி வரும் ஆசிரியர்களின் விருப்பத்தினைப் பெற்று மாறுதல்கள் வழங்கப்பட வேண்டும். மேற்படி முறையால் விண்ணப்பத்தில் குறிப்பிடாத பள்ளிகளில் காலிப் பணியிடம் இருந்து அதற்கு அவர்கள் விருப்பம் தெரிவித்தால் வழங்கலாம். மாறுதல் ஆணைகள் எந்த அடிப்படையில் வழங்கப்பட்டது என்பது குறித்த விவரம் அறிவிப்புப் பலகையில் தெளிவாக வெளியிடப்பட வேண்டும்.

ஆஆ) 2002–2003 ஆம் ஆண்டு முதல் நியமனம் பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்கள் அவர்கள் நியமனம் பெற்ற மாவட்டத்தில் பணிவரன்முறை செய்யப்பட்டு தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட நிலையில் வேறு மாவட்டத்திற்கு மாறுதல் அளிப்பது குறித்து பரிசீலிக்கப்பட வேண்டும்.

இஇ) கலந்தாய்வு நாளன்றே மாறுதல் உத்தரவு அளிக்கப்பட வேண்டும்.

ஈஈ) கலந்தாய்வின்போது இடையூறு விளைவிக்கும் அல்லது கலந்தாய்வைத் தடுக்கும் ஆசிரியர்கள் / இதர பணியாளர்கள் மீது தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. இத்துறையில், நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் 6, 7, 8 வகுப்புகளில் ஏற்படும் காலிப் பணியிடங்கள் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களாக தரம் உயர்த்தப்பட்டு, பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பப்பட்டு வருகின்றன. எனவே, 6, 7, 8 வகுப்புகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்கள் மேற்படி பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு மாறுதல் பெற இயலாது.

5. இத்துறை நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6, 7, 8 வகுப்புகளில் காலியாகும் பணியிடங்களில், மாறுதல் மூலம் ஒரு முறை பட்டதாரி ஆசிரியரைக் கொண்டு நிரப்பப்பட்டவுடன் அப்பணியிடம் தொடர்ந்து பட்டதாரி ஆசிரியர் பணியிடமாகவே கருதப்படும்.

6. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையை பொறுத்தமட்டில் ஆசிரியர் பணியிட மாறுதல்கள், கலந்தாய்வு (Counselling) முறையில் அவ்வாசிரியப் பெருமக்களின் விருப்பத்துக்கு ஏற்றபடி செய்யப்படுவதால், "மாறுதல் பயணப்படி" போன்ற எந்தவித செலவினமும் அரசுக்கு ஏற்படக் கூடாது என அறிவுறுத்தப்படுகிறது. மேலும் அனைத்து பதவிகளுக்குமான கலந்தாய்வுகள் சென்னையில், ஆதி திராவிடர் நல இயக்குநர் தலைமையில் உள்ள குழுவால் மட்டுமே நடத்தப்பட வேண்டும்.

7. சிறப்பு நிகழ்வுகள் எனக் கருதப்படும் இனங்களில், குறிப்பாக, ஓராசிரியர் பள்ளிகள் இல்லாமல் இருப்பதை நடைமுறைப்படுத்தவும், நிர்வாக ஒழுங்கிற்கு அவசியம் எனக் கருதப்படும் நிலையில் நிர்வாகக் காரணங்களுக்காகவும், ஆதி திராவிடர் நல இயக்குநரே மாறுதல் ஆணைகள் வழங்க அனுமதி வழங்கப்படுகிறது.

8. மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர், உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர், நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர், ஆரம்பப்பள்ளி தலைமையாசிரியர், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர், உடற்கல்வி இயக்குநர், பட்டதாரி ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர், கணினி ஆசிரியர், தமிழாசிரியர் மற்றும் இடைநிலை ஆசிரியர் போன்றவர்களுக்கு Online மூலம் கலந்தாய்வு நடத்தவும், பட்டதாரி மற்றும் இடைநிலை காப்பாளர்களுக்கு நேரடி கலந்தாய்வு முறையினைப் பின்பற்றி இயக்குநர் அவர்களால் பணி மாறுதல் வழங்கவும் ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

9. ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பட்டதாரி ஆசிரியர்கள் விடுதிகளில் காப்பாளர் / காப்பாளினியாக நியமனம் செய்யப்படுவதை தவிர்த்து அவர்கள் ஆசிரியர்களாக மட்டுமே நியமனம் செய்யப்பட வேண்டும். ஒரு சில மாவட்டங்களில் விடுதிகள் அதிகமாக இருந்து பள்ளிகள் குறைவாக இருக்கும் பட்சத்தில் மேற்கண்ட பாடங்கள் படித்து விடுதிகளில் காப்பாளர் / காப்பாளினியாக பணிபுரிபவர்களை உடனடியாக வேறு மாவட்டத்திற்கு ஆசிரியர்களாக பணிமாறுதல் செய்யலாம். மேற்கண்ட பாடங்களைப் படித்த பட்டதாரி ஆசிரியர்களை எக்காரணம் கொண்டும் விடுதிகளில் காப்பாளர் / காப்பாளினியாக பணி அமர்த்தக் கூடாது.

10. அனைத்துப் பதவிகளுக்குமான பொது மாறுதல்கள் குறித்த கலந்தாய்வுப் பணிகளை 24.08.2016–இக்குள் நடத்தி முடிக்கவும், கலந்தாய்வு பணிகள் முடிக்கப்பட்டது குறித்த அறிக்கையினை அரசுக்கு அனுப்பவும் ஆதி திராவிடர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

11. மேலும், Online மூலம் பொது மாறுதல் கலந்தாய்வுப் பணிக்கு தேவைப்படும் ரூ.75,000/– (ரூபாய் எழுபத்தைந்தாயிரம் மட்டும்) செலவினத்தை 2016–2017 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஆதி திராவிடர் நல இயக்குநர் அலுவலகத்தின் சில்லரைச் செலவினத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.27.54 இலட்சத்திலிருந்து மேற்கொள்ள ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப. அண்ணாமலை
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், ஆதி திராவிடர் நலம், சென்னை – 5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை – 5.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 8.
முதன்மை மாநிலக் கணக்காய்வுத் தலைவர்,சென்னை–18/35 (பெயரில்)
நகல்
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
பள்ளிக்கல்வித் துறை, சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மைச் செயலரின் முதுநிலை தனிச் செயலர், சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 20/7/2016